

## மதுரை நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனா் வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவா்

உயா்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியின் வளா்ச்சிக்கென முச்சங்கம் வைத்துத் தமிழாய்ந்த பாண்டியா்களைப் போல நான்மாடக்கூடலில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவியவரும் ஒரு பாண்டியா்தாம். தமது உடல் பொருள் உணா்வு அனைத்தையும் தமிழ் மொழிக்காகக் கொடுத்த தமிழ் வள்ளல். அவா் உக்கிரபாண்டியன் என்றும் இயற்பெயரைக் கொண்ட சேது மன்னரின் வழித் தோன்றல் பாண்டித்துரைத் தேவா்!

சேதுமன்னா்களில், வேதாந்தத்தில் மிகுந்த ஈடுபாடுடைய பாஸ்கரசேதுபதி, சுவாமி விவேகானந்தரைக் கி.பி.1984இல் சிகாகோவில் நடைபெற்ற சமய மாநாட்டிற்குத் தமக்கு வந்திருந்த அழைப்பினை அவருக்குக் கொடுத்து தம்சொந்தப் பொருட்ச்செலவில் அனுப்பிவைத்தாா். இத்தகு பெருமைக்குரிய சேது அரசா் 1893 சனவரி 13ஆம் நாளில் எழுதிய நாட்குறிப்பில் ‘எனது வாழ்வின் குறிக்கோள் (Ambitions in my life)’ என்னும் தலைப்பில் 33 குறிக்கோள்களைக் குறித்துள்ளாா். அவற்றுள் தமிழ்ச்சங்கம் நிறுவவேண்டும் என்பதுவும் ஒன்று. தமிழ்ச்சங்கம் அமைக்க வேண்டுமென்ற பாஸ்கரசேதுபதியின் விருப்பம், அவரது பெரியதந்தையாா் பொன்னுச்சாமித்தேவரின் மகனாரும், பாலவனத்தம் சமீந்தாருமாகிய பாண்டித்துரைத் தேவரால் நிறைவேரியது.

மதுரையில் இருந்த தனது மாளிகைக்கு வரும்போதெல்லாம் பாண்டித்துரையாா் தமது சொற்பொழிவுத் திறனால் மதுரைமக்களின் மனங்கவா்ந்தவராக விளங்கினாா். ஒருமுறை மதுரை வந்தபோது அவ்வூா் அறிஞா்கள் “தமிழ்ச் சிறப்பு” பற்றி சொற்பொழிவாற்றும்படி வேண்டிக் கொண்டனா். இதற்கு இணங்கிய தேவா், உரைக்கு வேண்டிய ஆராய்ச்சி செய்யும் பொருட்டு திருக்குறள், கம்பராமாயணம் போன்ற நூல்களைத் ஈட்ட முயற்சித்தபோது, அங்காடிகள், நூலகங்கள் மற்றும் அறிஞா்களின் மனைகளிலிருந்தும் பெற முடியவில்லை. சங்கமிருந்த மதுரையில் தமிழுக்குக் கதி (க – கம்பராமாயணம், தி – திருக்குறள்) என்று சொல்லக்கூடிய நூல்கள் இல்லையே என வருந்தினாா். தமிழ்மொழியே கதி இழந்ததாகக் கருதினாா். அதனால் மதுரை நகரில் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்க நினைத்து 1901ஆம் ஆண்டு செப்டம்பா் 14-ஆம் நாளில் நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தாா்.

சங்கம் தோற்றம் பெற பாஸ்கரசேதுபதி தமது பரிவாரங்களுடன் வந்திருந்து பொருள் நனி உதவினார். அன்றைய நிகழ்வு குறித்து **இந்து நாளேடு** 'சேதுபதி அரசர் சங்கத்தின் நடைமுறைச் செலவுகள் அனைத்தையும் மொழிப்பற்றுடன் ஏற்றுக்கொண்டபோது, பாண்டித்துரையார் உழைப்பு அனைத்தையும் இச்சங்கத்திற்கே கொடுத்துள்ளார்" என்ற செய்தியை வெளியிட்டிருந்தது.

பாண்டித்துரைத்தேவர் தமிழ்ச்சங்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் என்றால், அதற்கு அரணாக நின்று தாங்கியவர் பாஸ்கரசேதுபதி ஆவர். பாண்டித்துரையார், பாஸ்கரரை 'மன்னா' என்றழைப்பாராம். பாஸ்கர சேதுபதி பாண்டித்துரையாரை 'அண்ணா' என்றழைப்பாராம். மன்னரும் மன்னரின் அண்ணனுமாகப் பாசப்பிணைப்புடன் திழக்த இவ்விருவரும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தம் இன்னுயிராகக் கருதினர் எனில் மிகையில்லை. பாஸ்கரசேதுபதி எழுதிய "எனது வாழ்வின் குறிக்கோள்" நாட்குறிப்பில் மற்றொரு குறிக்கோளாக பாண்டித்துரைத்தேவருக்கு முன்பே தான் இறந்துவிட வேண்டும் என்று எழுதிய குறிப்பு இருவரது அன்பின் ஆழத்தை அறியச் செய்கிறது.

தமிழ்மொழியின்பால் தீராத பற்றுடைய பாண்டித்துரையார் நாட்டுப்பற்றிலும் நாட்டம் கொண்டவர். இந்திய விடுதலைக்குப் போராடிய வ.உ.சிதம்பரம்பிள்ளை தொடங்கிய 'சுதேசி ஸ்டீம் நாவிகேசன்' கம்பெனிக்கு 1905ஆம் ஆண்டில் தமது ஜமீனை விற்று அதன் மூலம் கிடைத்த ரூபாய் ஒரு லட்சத்தை கப்பல் கம்பெனியில் முதலீடு செய்து கப்பல் கம்பெனியின் தலைவராகச் செயலாற்றினார்.

தமிழ்மொழிக் கல்வி ஒன்றனை பயிற்றுவிப்பதையே நோக்கமாகக் கொண்ட செந்தமிழ்க் கலாசாலை, பழந்தமிழ் நூல்களைப் பாதுகாத்து வைப்பதற்குரிய பாண்டியன் நூலகம், இதுவரை அச்சிடப்பெறாத நூல்களைப் பதிப்பித்து வெளியிட ஓர் அச்சகம், திங்கள் தோறும் வெளிவரக்கூடிய செந்தமிழ் இதழ் ஆகிய அமைப்புகளும் சங்கத் தொடக்கத்தின்போதே பாண்டித்துரைத்தேவரால் நிறுவப்பெற்றன.

தமிழகம் மற்றும் ஈழம் முதலிய நாடுகளிலிருந்து தமிழ் வல்லுநர்களை அழைத்து, சங்கத்தில் அங்கத்தவராக்கி எதிர்கால தமிழ் வளர்ச்சிக்கு வழிவகுத்தவர் தேவராவார். தமிழன்னைக்கு மேல் கூறிய தொண்டுகள் மட்டுமல்லாது, செய்யுள் இயற்றித் தொண்டாற்றும் புலமையும் ஆற்றலும் தேவரவர்களிடம் இருந்தது. இதற்குச் சான்றாக சிவஞானபுர முருகன் காவடிச்சிந்து, சைவ மஞ்சரி, இராஜஇராஜேஸ்வரிப் பதிகம்,

பன்னூல் திரட்டு மற்றும் பல தனி நிலைச் செய்யுள்களும் பல சிறப்பாயிரங்களும் திகழ்கின்றன. பாண்டித்துரைத்தேவரின் அவைப்புலவர்களாக விளங்கியவர்களுள் திரு.நாராயண ஐயங்கார், சுந்தரேசுவர ஐயர், அரங்கசாமி ஐயங்கார், சிவகாமியாண்டார், மு.இராகவ ஐயங்கார், பூச்சி சீனிவாச ஐயங்கார் என்பார் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

சேதுபதி உயர்நிலைப் பள்ளிக்கு அருகே உள்ள, இப்போது தலைமை அஞ்சலகம் இருக்கின்ற பாண்டித்துரைத் தேவருக்குச் சொந்தமான இடத்தில்தான் தமிழ்ச்சங்கத் துவக்கவிழா நடைபெற்றது. அங்கு கட்டிடம் கட்டுவதற்குக் காலதாமதம் ஆகுமென்பதால் வடக்குவெளிவீதியில் உள்ள தனது மாளிகையையே சங்கம் செயல்படுவதற்குத் தானமாக வழங்கினார். பாண்டித்துரையாரின் மறைவுக்குப் (02.12.1911) பின்னர் இந்திய அரசாங்கம் தலைமைத் தபால் நிலையம் அமைப்பதற்காக சங்கத்துக்குச் சொந்தமான காலியிடத்தை Land Acquisition Actபடி கையகப்படுத்த முனைந்தது. ஈட்டுத்தொகையேனும் செவ்விதாகக் கிடைக்கத் திரு.சீனிவாசராவ்சாகிப் என்பார் முயன்று உதவினார். அதனால் ஐம்பதாயிரம் ரூபா ஈட்டுத்தொகையாக தர அரசு இசைந்தது. அத்தொகையை ஏற்றுக் கொள்ளப்பெற்று வங்கி ஒன்றில் வட்டி வைப்பாக்கி வைக்க 1920 ஏப்ரல் 18இல் நிகழ்ந்த செயற்குழுக்கூட்டம் தீர்மானித்தது. அத்தொகை மதுரை இராமநாதபுரம் மையக் கூட்டுறவு வங்கியில் போடப்பட்டது. 1901ஆம் ஆண்டிலிருந்து இக்காலம் வரை 115ஆண்டுகளாக பாண்டித்துரைத்தேவரின் இல்லத்திலேயே சங்கமும், கல்லூரியும், நூலகமும் இயங்கிவருகின்றன. பழந்தமிழ் நூல்களின் பெட்டகமாகவும், ஆய்வாளருக்குப் பயன்படும் வகையிலும் நூலகம் திகழ்கிறது. தமிழறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாய் செந்தமிழ் இதழ் வெளியிடப்படுகிறது. தொடக்க காலத்தில் செந்தமிழ்க் கலாசாலையில் உணவு, உடை, உறையுள் முதலியன கொடுத்து இலவசமாகத் தமிழ்க்கல்வி கற்பிக்கப்பட்டது. இக்கல்லூரியில் படித்து தமிழ்ச்சங்கப் புலவர் என்னும் பட்டம் பெற்றவுடன் அரசுப்பணிகளில் பணியாற்றும் தகுதியையும் பெற்றனர். 1957ஆம் ஆண்டில் அரசு உதவிபெறும் கல்லூரியாக ஆனபோதும், அஞ்சல் வழிக் கல்வி முறையில் பள்ளி இறுதி வகுப்பு படித்தோருக்குத் தனித்தேர்வுகள் நடத்திச் சான்றிதழும், புலவர் பட்டத்தையும் தமிழ்ச்சங்கம் வழங்கியது. 1977ஆம் ஆண்டு வரை தமிழ்ச்சங்கப் புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு அரசுப் பள்ளிகளில் வேலைவாய்ப்பு கிடைத்தது. நா.மு.வேங்கடசாமி நாட்டார், கார்மேகக்கோனார், தேவநேயப்பாவாணர், நாவலாசிரியர் நா.பார்த்தசாரதி, சாம்பசிவன், சங்குப்புலவர், கா.காளிமுத்து போன்ற நாடறிந்த நல்லறிஞர் இச்சங்க்ததில் பயின்றவர்களே. இக்காலத்திலும் செந்தமிழ்க் கல்லூரியில் பயின்றோர்

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகப் பணியாற்றித் தனித்திறம் மிக்கோராகத் திகழ்கின்றனர்.

1911ஆம் ஆண்டிற்குப் பின்னர் சேதுபதி மன்னர்களின் தலைமையின்கீழ் இச்சங்கம் தொடர்ந்து இயங்கிவருகிறது. இப்போது முகவை மன்னர் குமரன்சேதுபதி தமிழ்ச்சங்கத் தலைவராகத் தமிழ்ப்பணி ஆற்றிவருகின்றார்.

தமிழின் உயர்வுக்காக உறங்காது உழைத்த உத்தமர், 1911ஆம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் நாள் வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் உயிர் துறந்ததை எண்ணி தமிழ் உலகம் வருந்தியபோதும், அவரால் உருவாக்கப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கம் நூறாண்டுகளுக்கு மேலாக தமிழ்த் தொண்டாற்றி வருவது தேவரவர்களின் உண்மைத் தமிழ்பற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.